# குழந்தை பிறந்தவுடன் போடப்படும் ஹெபடைடிஸ் பி (மஞ்சள் காமாலை) தடுப்பூசி

கர்ப்பிணிப் பெண்களுக்கான தகவல்

ஹெபடைடிஸ் பி தடுப்பூசியானது வாழ்நாள் முழுவதுமான உடல்நலக்குறைவு, கடுமையான கல்லீரல் நோய் மற்றும் கல்லீரல் புற்றுநோய் ஆகியவற்றிலிருந்து உங்கள் குழந்தையை பாதுகாக்கிறது.

## என் குழந்தைக்கு ஹெபடைடிஸ் பி தடுப்பூசியை பிறந்தவுடனேயே ஏன் போட வேண்டும்?

பின்வரும் காரணங்களுக்காக, குழந்தை பிறந்த 24 மணிநேரத்திற்குள்ளாகவே இந்தத் தடுப்பூசியை போட வேண்டுமென பரிந்துரைக்கப்படுகிறது:

- ஹெபடைடிஸ் பி நோய் தாயிடமிருந்து குழந்தைக்கு பரவுவதை அல்லது நெருங்கிய தொடர்பில் இருக்கும் பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து குழந்தைக்கு இந்நோய் பரவுவதைத் தடுக்கும்
- உங்கள் குழந்தைக்கு நாள்பட்ட ஹெபடைடிஸ் பி நோய் ஏற்படுவதற்கான அபாயத்தைக் குறைக்கும்.

குழந்தை பிறந்த 7 நாட்களுக்குள்ளும் இந்தத் தடுப்பூசியை போடலாம். நீடித்த பாதுகாப்பிற்கு, வழக்கமாக கொடுக்கப்படும் குழந்தை தடுப்பூசி அட்டவணையின் ஒரு பகுதியாக கூடுதல் டோஸ்கள்/மருந்தளவுகளும் வழங்கப்படுகின்றன.

தேசிய நோய்த்தடுப்பு திட்டத்தின் கீழ் இந்தத் தடுப்பூசி இலவசமாக வழங்கப்படுகிறது.

## ஹெபடைடிஸ் பி தடுப்பூசி போட்டுக்கொள்வது பாதுகாப்பானதா?

**ஆம்.** பிறந்த குழந்தைகளுக்கு ஹெபடைடிஸ் பி தடுப்பூசி போடுவது பாதுகாப்பானதே.

விக்டோரியா மாகாணத்தில் பிறந்த குழந்தைகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமான குழந்தைகளுக்கு ஹெபடைடிஸ் பி தடுப்பூசி போடப்படுகிறது.

இது தாய்ப்பால் சுரப்பை பாதிக்காது மற்றும் ஊசி போடப்பட்ட இடம் சிவந்துப் போகுதல் மற்றும் வீக்கம் போன்ற மிக லேசான பக்க விளைவுகளே ஏற்படும்.

## என் குழந்தை குறை பிரசவத்தில் பிறந்தால் என்ன செய்வது?

குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்கு (32 வாரங்களுக்கு குறைவான கர்ப்பகாலம்) அல்லது பிறக்கும் போது எடை குறைவாக (2000 கிராமுக்கும் குறைவாக) இருக்கும் குழந்தைகளுக்கு குழந்தை பிறந்த 12 மாதத்தில் கூடுதல் தடுப்பூசி டோஸ் போடுவது பரிந்துரைக்கப்படுகிறது, இது நீடித்த பாதுகாப்பை வழங்கும்.

## ஹெபடைடிஸ் பி என்றால் என்ன?

ஹெபடைடிஸ் பி என்பது எளிதில் தொற்றிக் கொள்ளும் தன்மையுடைய வைரஸ் ஆகும், இது கல்லீரலை பாதிக்கும். சில பெரியவர்களுக்கு இந்தத் தொற்றுநோயிலிருந்து குணமடையும் எதிர்ப்பு சக்தி இருக்கும், ஆனால் குழந்தைகள் மற்றும் பிறந்த குழந்தைகளுக்கு, இது நாள்பட்ட (வாழ்நாள் முழுவதுமான) நோயாக மாறி கல்லீரல் நோய் மற்றும் கல்லீரல் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடும்.

ஹெபடைடிஸ் பி நோயின் அறிகுறிகளில் பின்வருவன உள்ளடங்கும்:

- காய்ச்சல்
- சோர்வு
- பசியின்மை
- குமட்டல்
- வாந்தி
- தோல் மற்றும் கண்கள் மஞ்சளாக இருத்தல்
- தசைகளில் அல்லது மூட்டுகளில் வலி கீல்வாதம்.

பிறந்த குழந்தைகள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடத்தில் பெரும்பாலும் எந்த அறிகுறிகளும் தென்படாது.

## ஹெபடைடிஸ் பி வைரஸ் எவ்வாறு பரவும்?

ஹெபடைடிஸ் பி வைரஸ் அதிகம் தொற்றிக் கொள்ளும் தன்மை கொண்டது, பாதிக்கப்பட்ட நபரின் இரத்தம் அல்லது உடல் திரவங்கள் மூலம் இது பரவுகிறது.

பிறந்த குழந்தைகள் மற்றும் பிள்ளைகளுக்கு ஹெபடைடிஸ் பி வைரஸ் வரக்கூடிய சூழல்கள்:

- பிரசவத்தின்போது ஹெபடைடிஸ் பி நோயால் பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து குழந்தைக்கு பரவும்
- ஹெபடைடிஸ் பி நோயால் பாதிக்கப்பட்ட நபருடனான நெருங்கிய தொடர்பினால் பரவும், அதாவது அவரது உடம்பில் ஏற்படும் சிறிய தோல் காயம்/வெடிப்புகள் அல்லது வாய் புண்களில் இருந்து கசியும் திரவங்கள் மூலம் பரவும்.

பலருக்கு தங்களுக்கு ஹெபடைடிஸ் பி இருப்பதே தெரியாது, இவ்வாறு தெரியாமலேயே அவர்கள் மற்றவர்களுக்கும் பரப்புகிறார்கள்.

## நான் ஹெபடைடிஸ் பி நோயால் பாதிக்கப்பட்டால் என்ன செய்வது?

நீங்கள் நாள்பட்ட ஹெபடைடிஸ் பி நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், பிரசவத்தின்போது உங்கள் குழந்தைக்கு சிறப்பு கவனிப்பு தேவை. ஹெபடைடிஸ் பி தடுப்பூசியுடன், 'ஹெபடைடிஸ் பி இம்யூனோகுளோபுலின்' என்ற மற்றொரு மருந்தும் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த 2 ஊசிகளும் உங்கள் குழந்தைக்கு ஹெபடைடிஸ் பி வைரஸிலிருந்து கூடுதல் பாதுகாப்பை வழங்குகின்றன. இரண்டு ஊசிகளும் குழந்தை பிறந்த 12 மணி நேரத்திற்குள் குழந்தைக்கு போட வேண்டும்.

**நினைவில் கொள்ளுங்கள்** – நீங்களும் உங்கள் குழந்தையும் ஹெபடைடிஸ் நோய்க்கான மருத்துவரிடம் வழக்கமான பரிசோதனைகளை செய்துக் கொள்ள வேண்டும்.

## கர்ப்ப காலத்தில் நான் ஹெபடைடிஸ் பி பரிசோதனை செய்துப் பார்க்க வேண்டுமா?

**ஆம்**. கர்ப்பக்காலத்தில் பொதுவாக அனைத்து பெண்களும் ஹெபடைடிஸ் பி பரிசோதனை செய்து பார்ப்பது கட்டாயம். நீங்கள் கர்ப்பமாக இருந்து, உங்களுக்கு ஹெபடைடிஸ் பி இருந்தால், நீங்கள் ஹெபடைடிஸ் மருத்துவரை சந்திக்க வேண்டும். பிரசவத்தின்போது உங்களிடமிருந்து உங்கள் குழந்தைக்கு வைரஸ் பரவும் வாய்ப்பைக் குறைக்க நீங்கள் மருந்துகள் எடுக்க வேண்டியிருக்கலாம்.

**பிறந்தவுடன் போட்டுக்கொள்ள வேண்டிய ஹெபடைடிஸ் பி தடுப்பூசியைப் பற்றியகூடுதல் தகவலுக்கு, உங்கள் மருத்துவர், மருத்துவச்சி/பேறுகால உதவியாளர் அல்லது நோய்த்தடுப்பு சேவை வழங்குனரை அணுகவும்.**

## கூடுதல் தகவலுக்கு பின்வரும் இணைப்பைப் பார்வையிடவும்

- MumBubVax <http://www.health.gov.au/news/mumbubvax-new-website-for-expectant-parents>
- நோய்த்தடுப்பு பற்றிய அறிவைப் பகிர்தல் (SKAI) <https://talkingaboutimmunisation.org.au/>
- தேசிய தடுப்பூசி திட்ட அட்டவணை <https://www.health.gov.au/health-topics/immunisation/immunisation-throughout-life/national-immunisation-program-schedule>
- சிறந்த ஆரோக்கிய சேனல்: ஹெபடைடிஸ் பி - தடுப்புமருந்து <http://www.betterhealth.vic.gov.au/health/healthyliving/hepatitis-b-immunisation>

பிறந்தவுடன் போட்டுக்கொள்ள வேண்டிய ஹெபடைடிஸ் பி தடுப்பூசியைப் பற்றிய தகவலை வேறொரு மொழியில் பெற, உடல் ஆரோக்கியம் பற்றிய மொழிபெயர்ப்புகளைப் பார்வையிடவும் <https://healthtranslations.vic.gov.au>

131 450 என்ற எண்ணிலும் மொழிபெயர்ப்பு சேவையை நீங்கள் அழைக்கலாம்.

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் பெற, <immunisation@health.vic.gov.au> என்ற முகவரியில் நோய்த்தடுப்பு குழுவிற்கு மின்னஞ்சல் அனுப்பவும்..

விக்டோரியன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது, 1 Treasury Place, Melbourne.

© விக்டோரியா மாநிலம், ஆஸ்திரேலியா, சுகாதாரத் துறை, டிசம்பர் 2021.

# Hepatitis B vaccination at birth

Information for pregnant women

The hepatitis B vaccine can protect your baby from life-long illness, serious liver disease and liver cancer.

## Why does my baby need hepatitis B vaccine at birth?

The vaccine is recommended within 24 hours of birth to:

- prevent the spread from a mother to her baby, or from an infected person in close contact
- reduce the risk of your baby developing chronic hepatitis B.

The vaccine can also be given within the first 7 days of life. For lasting protection additional doses are given as part of the routine infant immunisation schedule.

The vaccine is free of charge under the National Immunisation Program.

## Is the hepatitis B vaccine safe?

**Yes.** Hepatitis B vaccine is safe for newborn babies.

More than 90 per cent of newborns in Victoria receive the hepatitis B vaccine.

It does not affect breastfeeding and side effects are mild, like redness and swelling at the injection site.

## What if my baby was born prematurely?

Babies born prematurely (less than 32 weeks gestation) or with a low birth weight (less than 2000 grams) are recommended to have an extra dose of the vaccine at 12 months of age to provide lasting protection.

## What is hepatitis B?

Hepatitis B is a very infectious virus that affects the liver. Some adults can fight the infection and recover but for babies and young children, it can become a chronic (lifelong) illness that may cause liver disease and liver cancer.

Symptoms of hepatitis B include:

- Fever
- Tiredness
- Loss of appetite
- Nausea
- Vomiting
- Yellow skin and eyes

- Aching muscles or joints arthritis.

Babies and children under 5 years of age often do not show symptoms.

## How is the hepatitis B virus spread?

Hepatitis B virus is very infectious and spreads through contact with an infected person's blood or body fluids.

Babies and children can catch the hepatitis B virus:

- during birth from a mother who has hepatitis B
- through bodily fluid from small skin breaks or mouth sores by a close contact with hepatitis B.

Many people don't know they have hepatitis B and spread it to others.

## What if I am hepatitis B positive?

If you live with chronic hepatitis B your baby needs special care at birth. In addition to the hepatitis B vaccine, another medicine called 'hepatitis B immunoglobulin' is also recommended. These 2 injections provide extra protection for your baby against the hepatitis B virus. Both injections should be given within 12 hours of birth.

**Remember** – you and your baby will need regular check-ups with a hepatitis doctor.

## Do I need to be tested for hepatitis B during pregnancy?

**Yes**. All women should be tested for hepatitis B infection during routine pregnancy check-ups. If you are pregnant and have hepatitis B, you should see a hepatitis doctor. You may need to take medicine that will reduce the chance of passing on the virus to your baby during birth.

**For more information about the hepatitis B vaccine at birth, speak to your doctor, midwife or immunisation provider.**

## More information

- MumBubVax <http://www.health.gov.au/news/mumbubvax-new-website-for-expectant-parents>
- Sharing Knowledge About Immunisation (SKAI) <https://talkingaboutimmunisation.org.au/>
- National Immunisation Program Schedule <https://www.health.gov.au/health-topics/immunisation/immunisation-throughout-life/national-immunisation-program-schedule>
- Better Health Channel: Hepatitis B – immunisation <http://www.betterhealth.vic.gov.au/health/healthyliving/hepatitis-b-immunisation>

For information about the hepatitis B vaccine at birth in another language, visit Health Translations <https://healthtranslations.vic.gov.au>

You can also call the translation and interpreting service on 131 450.

To receive this document in another format, email the Immunisation Team <immunisation@health.vic.gov.au>.

Authorised and published by the Victorian Government, 1 Treasury Place, Melbourne.
© State of Victoria, Australia, Department of Health, December 2021.